மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற நிரந்தர ஊழியர்கள், குறிப்பாகச் செயலாளர்கள் தவறு செய்கின்றார்கள். அவர்களை மாற்ற முடியவில்லை என்று தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே வந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

97—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

*4358—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணமகள் திருமணத்திற்குப் பின் இறந்துவிட்டால், உதவித் தொகையினை மணமகளின் பெற்றோர்களுக்கு வழங்குவதற்கான அரசின் பரிசிலனையில் உள்ள கருத்துரு பற்றிய முடிவு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) எம் எனில், விரைவில் முடிவெடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளுடைய திருமணத்திற்கு வாங்கப்பட்ட கடன் தொல்லைகளினால் கடந்த ஒரு வருஷமாக அல்லல்படும் மணமகளின் தந்தைக்கு, திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பணம் விரைவில் கிடைக்க அரசாங்கத்தால் ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப்

1992 பிப்ரவரி 7]

பின்னால் ஏறக்குறைய தமிழகம் முழுவதும் இந்த 7 மாத காலத்திற்குள் 10,600 பேருக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்த மனுக்கள் கொடுக்கப்பட்டாலும் விரைவில் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் மனுக்கள் கொடுக்கிறவர்களுக்கு, மாவட்டத் தலைநகரத்திலே இருக்கிற சமூக நலத் துறை அதிகாரி தான் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து பணம் கொடுக்கிறார். சில பேர் மனுக்களில் நிலை என்னவென்று ஆராய்வதற்காக மாவட்டத் தலைநகரத்திற்குச் செல்வதற்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற அந்த விண்ணப்பதாரர்களுக்கு நகராட்சி ஆணையாளரே அந்தப் பணத்தைக் கொடுக்கிறார். அதே போல ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே இருக்கிற விண்ணப்பதாரர்களின் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்யவும் அதற்குண்டான நிதியை வழங்கவும் உண்டான அதிகாரம் அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கே வழங்கப்படுமா, அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, மாவட்ட சமூக நலத் துறை மட்டும் இந்தப் பணியைச் செய்யவில்லை. ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்தும் கூட, அதே போல, நகரியம், நகராட்சி, மற்றும் மாநகராட்சி ஆகிய அலுவலகங்களிலேயிருந்தும் விண்ணப்பங்களைப் பெறுகிறார்கள். அந்த விண்ணப்பங்கள் சமூகநலத் துறை அதிகாரியினால் சரிபார்க்கப்படுகின்றன. அதற்குப் பின்னால் அந்த விண்ணப்பத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்புவார்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரியப் பகுதிகளுடைய செயல் அலுவலர்கள் திருமண உதவித் தொகை வழங்க ஒப்புதல் அளித்த பிறகு, அந்தத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் இருக்கின்ற செக்குகள் அங்கே அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 98. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.